
கற்றல் முகாம் 2014
கருத்துமாறா வாக்கியம்

# வாக்கிய அமைப்பு

- எழுவாய்
- பயனிலை
- செயப்படுபொருள்




எ.கா:

- மாலா எழுதினாள்
- ராமன் நூலகம் சென்று புத்தகம் படித்தான்.

# கருத்துமாறா வாக்கியம்



- கருத்து மாறாமல் /

  பொருள் மாறாமல் எழுதுதல்

- வாக்கியத்தை முடித்தெழுதுதல்



# வாக்கிய வகைகள்

## கருத்துமாறா வாக்கியங்கள்

- செய்வினை செயப்பாட்டு வினை
- தன்வினை பிறவினை
- உடன்பாடு எதிர்மறை
- காரணம்
- ஒப்பீடு
- பொதுவானவை

# பின்பற்ற வேண்டியவை...

- முதல் வாக்கியத்தின் பொருளை நன்கு அறிதல்
- எழுவாய், பயனிலை போன்றவற்றைக் கண்டுபிடித்தல்
- வாக்கிய அமைப்பைப் புரிந்துகொள்ளல்

- இரண்டாம் வாக்கியத்தை வாசித்தல்
- எழுவாய் கண்டறிதல்
- வாக்கிய அமைப்பைப் புரிந்துகொள்ளல்
- இரண்டாம் வாக்கியத்திலுள்ள சொற்களை முதல் வாக்கியத்தில் நீக்குதல்
- முதல் வாக்கியத்தில் எஞ்சியுள்ள சொற்களைக் கொண்டு இரண்டாம் வாக்கியத்தை முடித்தல் (புதிய சொற்களையும் பயன்படுத்தலாம்)
- எழுவாய், பயனிலை☑ - காலம்☑ - ஒருமை, பன்மை☑ சரிபார்க்கவும்

# கவனத்தில் கொள்க...



- காலம் மாறாமல் எழுதுதல்
- ஒருமை பன்மை மயக்கம் தவிர்த்தல்
- எழுவாய், பயனிலை இயைபுடன் இருத்தல்

# 1. செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்கள்

- ஐ / கு மறையும் (பெரும்பாலும்)
- எழுவாய் + ஆல்
- பயனிலை + படு / பட்டு

  (நிகழ்காலம், எதிர்காலம் = படு
  இறந்தகாலம் = பட்டு)
- செயப்பாட்டு வினையைச் செய்வினையாக மாற்றுவதாகவும் வினாக்கள் அமையும். அப்போது
- எதிர்நிலையில் செய்ய வேண்டும்

**(எ.கா)**

- தற்போதைய திரைப்படப் பாடல்களி ல், இசையமைப்பாளர்கள் பாடலின் இசைக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். (நிகழ்காலம்)

- தற்போதைய திரைப்படப் பாடல்களில் இசையமைப்பாளர்களால் ____ ________________________________________.

**(எ.கா)**

- கவிஞர் கண்ணதாசன் அவர்கள், தன் பாடல்களின் வழி வாழ்க்கைத் தத்துவங்களை விளக்கியுள்ளார். (இறந்தகாலம்)

- வாழ்க்கைத் தத்துவங்கள் ________________________________________.

**எழுவாய் + ஆல், பயனிலை + படு / பட்டு**

# 2. உடன்பாடு, எதிர்மறை வாக்கியங்கள்

☞ வாக்கியம் உடன்பாடாக இருந்தால் எதிர்மறையில் முடிக்கவும். எதிர்மறையாக இருந்தால் உடன்பாட்டில் முடிக்கவும்.

☞ விட்டால், விடில், அன்றி, இன்றி, ஒழிய என்ற சொற்களைக்கொண்டு முடியலாம்...

☞ அல்லது எதிர்மறை / உடன்பாட்டில் வாக்கியம் அமைந்திருக்கும்

இவ்வாறு வந்தால்...

☞ முடியாது, இயலாது, கூடாது, இல்லை, மாட்டார்கள்... என்று எதிர்மறையாக முடிக்க வேண்டும்.

**(எ.கா)**

☞ எந்த ஒரு செயலிலும் வெற்றிபெறத் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் வேண்டும். (எதிர்காலம்)

↓

☞ விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தாலொழிய* ______________

______________________________________________________.

**(எ.கா)**

☞ எந்த நிலையிலும் பொறுமையை இழக்காத மனிதனே தெய்வமாகிறான்.

(எதிர்காலம்)

↓

☞ உயர்ந்த மனிதனாக ஆக நினைப்பவன்*______________________________.

☞ **முடியாது, இயலாது, கூடாது, இல்லை, மாட்டார்கள்...**

# 3. காரண வாக்கியங்கள்

- ☞ இரண்டாம் வாக்கியத்தின் இறுதி
  **காரணம் / கு / எச்சமாக** (பாட, ஓட, எழுத, செய்ய...) முடியும்
- ☞ + **ஏ** சேர்க்கவும் (முடிக்கும் சொல்லுக்கு முன் உள்ள சொல்லில்)
- ☞ + **ஆகும்** என முடிக்கவும்

- ❑ காரணம் என்பதை முன்னாலும் இணைக்கலாம்
  (காரணம்.....(ஏ) **ஆகும்**. ...என முடியும்)

- ❑ காரணம் என்பதைப் பின்னாலும் இணைக்கலாம்
  (........(ஏ) **காரணமாகும்.** ...என முடியும்)

**(எ.கா)**

☞ தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியதால் ராஜராஜசோழன் வரலாற்றில் நீங்காத இடம் பெற்றுள்ளான். (இறந்தகாலம்)

☞ ராஜராஜசோழன் வரலாற்றில் நீங்காத இடம் பெற்றதற்குக் காரணம்* ________________________________.

**(எ.கா)**

☞ சென்ற வாரம் பயிற்சியில் ஈடுபட்டிருந்த காற்பந்தாட்ட வீரர் ஒருவர் மின்னல் தாக்கி மரணம் அடைந்தார். (இறந்தகாலம்)

☞ சென்ற வாரம் பயிற்சியில் ஈடுபட்டிருந்த காற்பந்தாட்ட வீரரின் மரணத்திற்கு*________________________________.

☞ **காரணம் ☑, ஏ ☑, ஆகும் ☑.**

# 4. தன்வினை, பிறவினை வாக்கியங்கள்

- தன்வினை பிறவினை வடிவங்களை அறிதல்
  கற்று-கற்பித்து, பழகி-பழக்கி, நடந்தது-நடத்தியது, வாடி-வாட்டி

- முடிக்கும் சொல்லில் **த்து - ந்து** என சிறு மாற்றமே இருக்கும்

**(எ.கா)**

☞ வானில் சென்றுகொண்டிருந்த விமானம் மேகத்தினுள் மறைந்தது.

(இறந்தகாலம்)

☞ வானில் சென்றுகொண்டிருந்த விமானத்தை ______________________.

**(எ.கா)**

☞ கடலில் சென்று கொண்டிருந்த கப்பல் கடும் புயலால் கவிழ்ந்தது.

(இறந்தகாலம்)

☞ கடலில் சென்றுகொண்டிருந்த கப்பலை ______________________.

**☞ வாக்கிய அமைப்பு ☑, சொல் மாற்றம் ☑**

# 5. ஒப்பீட்டு வாக்கியங்கள்

- முதல் வாக்கியத்தில் ஒன்றின் சிறப்பைக் கூறி, அடுத்த வாக்கியத்தில் பிறவற்றுடன் **ஒப்பிட்டுக்** கூறுவது போல் அமையும்.
- இரண்டாவது வாக்கியத்தில் **தவிர**, **விட**, **காட்டிலும்**, **போல்** போன்ற சொற்களில் ஏதேனும் ஒன்று வரலாம்.
- வாக்கியத்தில் பொருத்தமாக **எதுவும்**, **ஒன்றும்**, **யாரும்**, **எவரும்** போன்ற சொற்களில் ஒன்றைச் சேர்த்து எழுத வேண்டும்.
- அதனுடன் **வேறு** என்பதையும் இணைப்பதாய் வரும்



**(எ.கா)**

- மற்றவர்களிடம் நன்மதிப்பைப் பெறுவதற்கு அன்பே மிகச் சிறந்த வழியாகும். (எதிர்காலம்)

- மற்றவர்களிடம் நன்மதிப்பைப் பெறுவதற்கு அன்பைத் தவிர ________ ________________________________.

**(எ.கா)**

- நகைச்சுவை நடிகர்களில் விவேக் தன்னிகரற்று விளங்குகிறார். (நிகழ்காலம்)

- நகைச்சுவை நடிகர்களில் விவேக்கை விட ________________________.

**(வேறு) + யாரும், எவரும், எதுவும், ஒன்றும்,**

# 5. பொது வாக்கியங்கள்

- வேண்டும், தேவை, அவசியம் என முடிபவை
  (முடியும், இயலும் என முடிக்கவும்)
- முன் பின்னாக மாற்றி அமைப்பது போல் இருப்பவை
  (எழுவாய் பயனிலை இயைபுகொண்டு முடிக்கவும்)
- முற்றிலும் புதிய சொற்களைக் கொண்டு நிறைவு செய்பவை

**(எ.கா)**

- ஆர்வமும் முயற்சியும் இருந்தால் உங்கள் வாழ்க்கையைச் சாதனை வாழ்க்கையாக ஆக்கிவிட முடியும். (எதிர்காலம்)

- உங்கள் வாழ்க்கையைச் சாதனை வாழ்க்கையாக ஆக்கிவிட நீங்கள் ________________________________.

**(எ.கா)**

- மனிதன் தன் எண்ணத்திற்கேற்ப வளர்ச்சி பெறுகிறான்.

(நிகழ்காலம்)

- ஒரு மனிதனின் வளர்ச்சி ________________________.

**முடியும், இயலும்.... எழுவாய்க்கு ஏற்ப முடித்தல்**

# எளிய வழி...




வினாக்கள் வழி
வாக்கிய அமைப்பை அறிதல்

நண்பரிடம் கூறுவது போல்
பேச்சுநடையில் அமைத்தல்



©123Greetings.com


ந ன் றி!
நல்வாழ்த்துகள்!